**தங்காலை நகர சபை**
**அம்பாந்தோட்டை மாவட்டம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2017 மார்ச் 31 ஆந் திகதியும், முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2016 ஏப்ரல் 08 ஆந் திகதியும் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2017 செப்தம்பர் 26 ஆந் திகதி சபையின் செயலாளருக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து தங்காலை நகர சபையின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

கீழ்வரும் தகவல்கள் குறிப்பிடப்பட்டுள்ள கணக்கீட்டுக் குறைபாடுகள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டன.

(அ) நிலுவை சம்பளங்களின் கொடுப்பனவான ரூபா 392,601 தொகை கடன் கொடுத்தோர் கணக்கிற்கு சீராக்கம் செய்வதற்கு பதிலாக திரண்ட நிதியத்திற்கு சீராக்கப்பட்டிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளபடியான ஊழியர் கடன் மீதி ரூபா 9,015 இனால் குறைவாக நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது.

(இ) மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளபடியாக காணப்பட்ட2865 கிலோ கிராம்களான கூட்டொரு இருப்பின் பெறுமதி கணிப்பிடப்பட்டு கணக்கு வைக்கப்பட்டிருக்கவில்லை.

#### 1.3.2 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

ஊழியர் பிணை முதலீட்டு கணக்கு மற்றும் ஊழியர் பிணை வைப்புக் கணக்கு மீதிகளிடையே ரூபா 13,645 தொகையான வேறுபாடொன்று காணப்பட்டது.

#### 1.3.3 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) பெற வேண்டிய கணக்குகள்

நீண்ட காலமாக சபைக்கு அறவிடப்பட வேண்டியதாக காணப்படும் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான ரூபா 2,564,818 தொகையான நிலுவை வாடிவீட்டு வாடகையினை அறவிடுவதற்கு மீளாய்வாண்டின் போது அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) செலுத்த வேண்டிய கணக்குகள்

2014 ஆம் ஆண்டிற்குரிய ரூபா 269,355 தொகையான நிலுவை சம்பளப் பணத்தை செலுத்தி கணக்குகளை தீர்ப்பனவு செய்வதற்கு நடடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**1.3.4 கணக்காய்விற்கான சான்றுகளின்மை**

நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ள ரூபா 3,231,309 கூட்டுத்தொகையான வழக்கு தாக்கல் செய்யப்பட்ட வருமானத்திற்கான காலப் பகுப்பாய்வு, பேரேட்டுக் குறிப்புக்கள் மூலம் பதிவழிக்கப்பட்டிருந்த ரூபா 1,030,470 தொகையான வைப்பு மீதிகள் மற்றும் ரூபா 342,560 கூட்டுத்தொகையான இருப்பு ஆகியவற்றை கணக்கு வைத்தல் தொடர்பில் விரிவான பட்டேடாலைகள் சமர்ப்பிக்கப்படடாமையால் கணக்காய்வின் போது அவற்றை திருப்திகரமாக பரிசீலிக்க முடியாதிருந்தது.

**1.3.5 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான இணங்காமைகள்**

கீழே விபரிக்கப்பட்டுள்ள சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான இணங்காமைகள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டன.

| **சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு** | **இணங்காமைகள்** |
| --- | --- |
| (அ) நகர சபை கட்டளைச் சட்டம் (255 ஆம் அதிகாரம்) | |
| 180 (1) ஆம் பிரிவு | ஒவ்வொரு நிதியாண்டினதும் முடிவில் சபையின் நிதியத்திற்கு கிடைத்த மற்றும் செலவாகிய பணத்தின் தன்மை மற்றும் அளவுடன் சபையினுள் சபையின் நிர்வாகம் தொடர்பான விரிவான அறிக்கையொன்று சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) இலங்கை சனநாயக குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை | |
| i. நிதிப்பிரமாணம் 210 (1) | கழிவினை பெற்றுக்கொள்ளக்கூடிய அனைத்து சந்தர்ப்பங்களிலும் அந்த கழிவினை பெற்றுக்கொள்ளக்கூடிய வகையில் முன்கூட்டியே கொடுப்பனவுகளை மேற்கொள்ள வேண்டிய போதிலும், மீளாய்வாண்டிற்காக ரூபா 385,785 தொகையான நீர்க் கட்டணங்களை செலுத்தும் போது கழிவு நலன் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| ii. நிதிப்பிரமாணம் 571 (3) | 2004 ஆம் ஆண்டு முதல் 2014 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதிக்குரிய ரூபா 1,186,047 கூட்டுத்தொகையான 549 வைப்பு மீதிகள் தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களுக்கமைய 2016 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 10,419,278 ஆக இருந்ததுடன், அதனோடொத்த முன்னைய ஆண்டிற்கான மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 1,253,326 ஆகும். அதன் பிரகாரம் மீளாய்வாண்டிற்கான நிதி விளைவுகளில் ரூபா 9,165,952 ஆன அதிகரிப்பொன்றினை காட்டியது.

### 2.2 பகுப்பாய்வு ரீதியான நிதி மீளாய்வு

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டின் மொத்த மீண்டெழும் வருமானத்தில் 88 சதவீதமான பெறுமானத்துடனான மொத்த மீண்டெழும் செலவினங்கள் காணப்பட்டமையால், வருமானத்திற்கு ஒப்பாக செலவினங்கள் மிகவும் உயர்வான பெறுமானத்தை கொண்டிருந்தன.

(ஆ) ஒவ்வொரு ஆண்டினதும் சுயமாக உருவாகும் வருமானத்தினை மிகைத்து மீண்டெழும் செலவினம் மேற்கொள்ளப்படல் கவனத்திற் கொள்ளக்கூடிய பெறுமதிகளால் தொடர்ச்சியாக அதிகரித்திருந்ததுடன், மீளாய்வாண்டின் போது அந்த பெறுமானம் சுயமாக உருவாகும் வருமானத்தினை போன்று மூன்று மடங்கினை மிகைத்திருந்தது.

(இ) வருமான உதவிகள் கிடைத்திருக்காவிடில் சபையின் வருமானங்களால் எந்த விதத்திலும் மீண்டெழும் செலவினத்தை ஈடு செய்ய முடியாத நிலையொன்று உருவாகியிருந்த போதிலும் செலவினத்தை கட்டுப்படுத்துவதற்கு கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

### 2.3 செயற்படு மூலதன முகாமைத்துவம்

மீளாய்வாண்டின் போதும் நடைமுறை மற்றும் விரைவு விகிதங்களில் அங்கீகரிக்கப்பட்ட மட்டங்களை அண்மித்திருக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டது.

### 2.4 வருமான நிர்வாகம்

#### 2.4.1 வருமான சேகரித்தலின் செயலாற்றல்

2016 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான சபையின் வருமானம் சேகரித்தலின் செயலாற்றல் தொடர்பில் பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டிற்காக பட்டியலிடப்பட்ட வருமானம் ரூபா 23,013,122 ஆக இருந்ததுடன், அவற்றுள் ரூபா 17,304,170 தொகை சேகரிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் வருமானம் சேகரித்தலிலான செயன்முன்னேற்றம் 75 சதவீதமாகும்.

(ஆ) மீளாய்வாண்டின் ஆரம்பத்தில் பெற வேண்டிய வருமான மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 9,762,052 தொகையாகஇருந்ததுடன், அவற்றுள் 3,406,309 தொகை அறவிடப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் நிலுவை வருமானத்தை அறவிடுவதிலான செயன்முன்னேற்றம் 35 சதவீதமாக இருந்தது.

**2.4.2 வீதவரியும் வரியும்**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) ஆரம்ப நிலுவையில் 66 சதவீதம் மீளாய்வாண்டின் போது அறவிடப்பட்டிருந்ததுடன், ஆண்டின் இறுதியில் உள்ளபடியான நிலுவை மீதி ரூபா 966,145 ஆகும். அவற்றுள் ரூபா 2,000 இற்கு அதிகமான நிலுவை மீதியுடனான 51 வரி அலகுகளிலிருந்து அறவிடப்பட வேண்டிய பணம் ரூபா 330,190 ஆகும். நகர சபை கட்டளைச் சட்டத்தின் 170 (அ) இன் பிரகாரம் நிலுவை பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 1999 ஆம் ஆண்டின் வரி மதிப்பீட்டின் அடிப்படையில் மீளாய்வாண்டு வரையிலும் வரி அறவிடப்பட்டிருந்த போதிலும், புதிய மதிப்பீட்டு அறிக்கைகள் 2016 யூன் 20 ஆந் திகதி சபைக்கு கையளிக்கப்பட்டிருந்தது. எனினும், அந்த பரிந்துரைகள் 2017 யூலை 31 ஆந் திகதி வரையிலும் நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

**2.4.3 குத்தகை வாடகை**

நகர சபைக்குரிய தங்காலை வாடிவீடுகளுக்காக நகர அபிவிருத்தி அதிகாரசபையுடன் இணைந்த வரையறுக்கப்பட்ட லங்கா ரெஸ்ட் ஹவுஸ் நிறுவனத்திடமிருந்து 2016 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியாக ரூபா 2,564,818 தொகையான பணம் அறவிடப்பட வேண்டியதாக காணப்பட்டதுடன், அந்த பணத்தை அறவிடுவதற்கு நகர சபை கட்டளைச் சட்டத்தின் 170(அ) பிரிவின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**2.4.4 கடை அறை வாடகை**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) உடன்படிக்கைகளை நாளதுவரையாக்காமை

i. 2010 திசெம்பர் 27 ஆந் திகதிய தபபா/பபாகொ/2010/01 ஆம் இலக்க தென் மாகாண உள்ளூராட்சி ஆணையாளரின் சுற்றிக்கையின் 05 ஆம் பந்திக்கமைய எந்தவொரு உடன்படிக்கையும் 03 வருடங்களுக்கு ஒரு தடவை நாளதுவரையாக்கப்பட வேண்டிய போதிலும், 44 கடை அறைகளின் உடன்படிக்கைகள் 06 முதல் 31 வருடங்கள் வரையான காலப்பகுதியில் நாளதுவரையாக்கப்பட்டிருக்கவில்லை.

ii. தொடர்புடைய சுற்றிக்கையின் 06 ஆம் பநிதிக்கமைய கடை அறைகள் 05 வருடங்களுக்கு ஒரு தடவையேனும் மதிப்பீடு செய்யப்பட்டு குத்தகை வாடகை திருத்தப்பட வேண்டிய போதிலும், மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அதன் அறிவுரைகளுக்கமைய செயற்பட்டிருக்கவில்லை. 2016 பெப்ரவரி 23 ஆந் திகதி மேற்கொள்ளப்பட்ட மதிப்பீட்டினை நடைமுறைப்படுத்தாமல், 2002 மற்றும் 2011 ஆம் ஆண்டுகளில் எடுக்கப்பட்ட சபையின் தீர்மானங்களுக்கமைய வாடகை அறவிடப்பட்டிருந்தது. அதன் காரணமாக 2016 மார்ச் முதல் திசெம்பர் வரையான காலப்பகுதிக்குரியதாக சபையின் நிதியத்திற்கு ரூபா 2,931,625 தொகையான வருமானம் இழக்கப்பட்டிருந்தது.

(ஆ) ஜயசிங்க வத்த கடை அறை

i. நகர அபிவிருத்தி அதிகாரசபையால் நகர சபைக்குரிய ஜயசிங்க வத்தயில் நிர்மாணிக்கப்படும் கடை அறைகளின் நிர்மாண நடவடிக்கைகள் 08 வருடங்களுக்கு முன்னர் ஆரம்பிக்கப்பட்டிருந்த போதிலும், 2017 யூலை 31 ஆந் திகதி வரையிலும் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. எவ்வாறெனினும், 2009 யூன்

25 ஆந் திகதி 16 கடை அறைகளுக்காக மற்றும் 2011 சனவரி 06 ஆந் திகதி 11 கடை அறைகளுக்காகவும் ஒப்பந்ததாரருடன் உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருந்தது.

ii. பொதுச் சந்தையில் அமைந்துள்ள சபைக்கு சொந்தமான கடைகளை உடைத்து அகற்றும் அடிப்படையில் அதன 15 குத்தகையாளர்களுக்கு ஜயசிங்க வத்தயில் அமைந்துள்ள 15 கடைகளை வழங்குவதற்கு 2009 ஆம் ஆண்டின் போது உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருந்த போதிலும், பொதுச் சந்தையின் கடைகளை உடைத்து அகற்றுவதற்கு 2017 யூன் 30 ஆந் திகதி வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) நிலுவை கடை வாடகை

தங்கல்ல பேருந்து தரிப்பிடத்தில் அமைந்துள்ள 14 கடைகளிலிருந்து 01 முதல் 07 வருடங்கள் வரையான காலமாக வாடகை அறவிடப்பட்டிராததுடன், மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளபடியான அறவிடப்பட வேண்டிய நிலுவை பணம் ரூபா 171,181 ஆகும்.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல் மதிப்பீடு

(அ) வடிகாண்களின் புனரமைத்தல் மற்றும் பராமரிப்பு உள்ளடங்களான 46 செயற்பாடுகளுக்காக வருடாந்த பாதீட்டின் ஊடாக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ரூபா 5,446,200 தொகையான நிதியேற்பாடுகள் முழுமையாக எஞ்சியிருந்தது.

(ஆ) ஈ மற்றும் நுளம்புகளின் பெருக்கத்தினை கட்டுப்படுத்தி மக்களின் சுகாதார நிலைமைகளை முன்னேற்றும் செயற்திட்டத்திற்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ரூபா 100,000 தொகையான மொத்த நிதியேற்பாடும் வேறு செலவின விடயங்களுக்கு மாற்றப்பட்டிருந்தது.

### 3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) எரிபொருள் நுகர்வினை பரிசோதித்தல்

1990 ஒக்தோபர் 10 ஆந் திகதிய 41/90 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கையின் 2 ஆம் பந்திக்கமைய சபைக்கு சொந்தமாக காணப்பட்ட 18 வாகனங்களில் 11 வாகனங்களின் எரிபொருள் நுகர்வு மீளாய்வாண்டின் போது பரிசோதனை செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஆ) சபையின் தீ மற்றும் இடர் முகாமைத்துவ அலகின் இரு வாகனங்களின் உபகரணத் தொகுதிகள் இரண்டு இறுதியாக இருந்த தலைவரால் எடுத்துச் செல்லப்பட்டிருந்ததாக 2015 யூலை 07 ஆந் திகதி மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையின் போது வெளிப்படுத்தப்பட்டது. இந்த உபகரணத் தொகுதி எடுத்துச் செல்லப்பட்டு 02 வருடங்களுக்கு மேற்பட்ட காலம் கடந்திருந்த போதிலும் 2017 யூலை 10 ஆந் திகதி வரையிலும் மீண்டும் சபைக்கு கையளிக்கப்பட்டிருக்கவில்லை.

**3.3 திண்மக்கழிவு முகாமைத்துவம்**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) திண்மக்கழிவு மீள் சுழற்சி செயற்திட்டமொன்று நடாத்தப்பட்டிருந்த போதிலும், 2017 யூலை 30 ஆந் திகதி வரையிலும் சுற்றாடல் அனுமதிப்பத்திரம் அல்லது சூழல் பரிந்துரைகள் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஆ) கழிவு வரியிகை விதித்து செலவினங்களை ஈடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**3.4 பதவியணியினர் நிர்வாகம்**

மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான பதவியணியில் 06 பதவிகளுக்குரிய 27 பேருக்கான மிகையொன்றும் 16 பதவிகளின் 25 பேருக்கான பற்றாக்குறையொன்றும் நிலவியது. மிகையான பதவிகளை முறைமைப்படுத்துவதற்கும் வெற்றிடங்களை நிரப்புவதற்கும் சபையினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**4. கணக்களிதகைமையும் நல்லாளுகையும்**

**4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு**

வருமான விடயங்கள் 05 அற்குரிய அடையப்படாத இலக்குகளின் கூட்டுத்தொகை ரூபா 28,438,804 ஆக இருந்ததுடன், அது 10 சதவீதம் முதல் 80 சதவீதம் வரையான வீச்சினைக் கொண்டிருந்தமையால், பாதீடானது ஆக்கபூர்வமான முகாமைத்துவக் கட்டுப்பாட்டுக் கருவியொன்றாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டது.

**5. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்**

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பில் விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) வருமான நிர்வாகம்
(இ) பாதீட்டுக் கட்டுப்பாடு